DVC No. 7/2023

Date : 19.06.2026

ம.சா.1 - லேகா க/பெ. சுகன்குமார்

2026 ம் ஆண்டு ஜூன் மாதம் வெள்ளிக்கிழமை 19 ம் நாளன்று வாதி சாட்சியாக அ.சா. நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதி, 95 வது பிரிவின் படி ஏற்பட்டுள்ள படி), திருமதி.T.ஜெயராணி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டு திரு.மு.ஜாபர் சாதிக், தட்டச்சர் என்பவரால் தட்டச்சு செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1. நான் இந்த மனுவை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய உடைமைகள் நகைகள் அசல் சான்றிதழ்கள் ஆகியவை எனக்கு திரும்ப தர வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன். நான் எனது கணவருடன் எத்தனை வருடம் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் நான்கரை வருடம் சேர்ந்து வாழ்ந்தேன். இந்த விவரத்தை எனது வழக்கில் சொல்லி உள்ளேன் என்றால் சொல்லி உள்ளேன். எனது கணவரான 1ம் எதிர்மனுதாரர் விவாகரத்து வேண்டி மாண்புமிகு தாராபுரம் சார்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி விவாகரத்து மனுவில் என்ன உத்தரவிடப்பட்டிருந்தது என்றால் எனக்கு மாதந்தோறும் 15 ஆயிரம் தொகையை எதிர் மனுதாரர் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது.

2. எனது கணவர் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் நான் இம்மனுவை தாக்கம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் எனது கணவருடன் சேர்ந்து வாழ்வதற்காக எந்த ஒரு மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மனுவில் கோரியுள்ள பொருட்கள் அனைத்தும் திருமணத்தின்போது மண்டபத்தில் வைத்து தான் கொடுக்கப்பட்டது என்றால்நகை மட்டும் மண்டபத்தில் வைத்து கொடுக்கப்பட்டது மற்ற பர்னிச்சர் பொருட்கள் நேரடியாக வீட்டில் கொடுக்கப்பட்டது. நான் மேற்படி நகைகள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றை எனது பெற்றோர்கள் எனக்கு கொடுத்தார்கள் என்பதற்கும் நான் எனது கணவருக்கு கொடுத்துள்ளேன் என்பதற்கும் ஆதரவாக ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்யவில்லை.

3. எனக்கு எனது பெற்றோர் போட்ட நகைகளின் மொத்த மதிப்பு எவ்வளவு என்றால் 30 பவுன் தங்க நகை ஆகும். மேற்படி 30 பவுன் தங்க நகைக்கான ஆவணங்களை ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய நகைகள் எந்த நகைக்கடையில் வாங்கப்பட்டது என்றால் கோயம்புத்தூர் கல்யாண் ஜூவல்லர்ஸில் வாங்கப்பட்டது. நாங்கள் கல்யாண் ஜூவல்லர்ஸில் நகை வாங்கியதற்கான

ரசீதுகளை கல்யாண் ஜுவல்லர்ஸ் கொடுத்துள்ளது என்றால் சரிதான்.

4. மேற்படி நகைகளை எனது கல்யாணத்திற்கு முன்பு எப்போது வாங்கினோம் என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது பாதி நகைகள் வீட்டிலேயே இருந்தது. பாதி நகைகள் என்று நான் குறிப்பிடுவது எவ்வளவு நகைகள் என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. பாதி நகைகள் வீட்டில் இருந்து போடப்பட்டது என்றும் மீதி நகைகள் கடைகளில் வாங்கப்பட்டது என்ற விவரத்தை எனது மனுவில் சொல்லி உள்ளேன்என்றால் இல்லை. எனது கணவரும் எனது கணவரின் தாயாரும் என்னை கொடுமைப்படுத்தியதாக மனுவில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு உள்ள நிலையில் எனது கணவரும் எனது கணவரின் தாயாரும் என்னை கொடுமைப்படுத்தியது தொடர்பாக நான் காவல் நிலையத்திலோ அல்லது நீதிமன்றத்திலோ ஏதேனும் புகார் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை.

5. எதிர் மனுதாரர்கள் என்னை நல்ல முறையில் கவனித்துக் கொண்டதால்தான் அவர்கள் மீது காவல் நிலையத்திலோ அல்லது நீதிமன்றத்திலோ நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, அவர்கள் என்னை நல்ல முறையில் கவனித்துக் கொள்ளவில்லை. எனது குடும்ப பிரச்சினை தொடர்பாக 1,2 எதிர்மனுதாரர்கள் மீது மாவட்ட சமூக அலுவலரிடம் புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் இந்த மனுவில் சொல்லி உள்ள பொருட்கள் எல்லாமே எதிர் மனுதாரர்கள் வசம் தான் உள்ளது என்பதற்கு ஆதரவாக ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. எதிர் மனுதாரர்கள் என்னை அவமரியாதையாக நடத்தியது தொடர்பாக எனது தரப்பு சாட்சிகள் யாரேனும் இம்மனுவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர்கள் அவமரியாதையாக நடத்தியது தொடர்பாகவும் என்னுடைய பொருட்களை திரும்ப பெறுவது தொடர்பாகவும் நான் என்னுடைய வழக்கறிஞர்கள் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பை எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பினேன் என்றால் இல்லை நீதிமன்றத்தில் தான் மனு தாக்கல் செய்துள்ளேன்.

**நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.**

Taken down by before in open court read over interpreted to the witness in the presence of the Accused. Accused' s pleaded and admitted by the witness to be correct.

ஒம்/-அ.உமாமகேஸ்வரி
Judicial Magistrate,
Dharapuram